# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No. 132/2025

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திருமதி.பாரதி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பாரதி | வயது | : | 52/26 |
| க.பெ. | : | பாஸ்கர் | தொழில் | : | கூலி |
| ஊர் | : | கீழசிந்தாமணி | நிலை | : | LW03 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் கீழசிந்தாமணியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் என் உறவினர்கள், பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள். அ.சா.1 என் மருமகள். அ.சா.2 என் கணவர். எங்கள் வீட்டிற்கும் எதிரிகளின் வீட்டிற்கும் இடையில் எதிரிகளின் வீட்டு மரம் ஒன்று உள்ளது. அந்த மரத்தின் கிளைகள் எங்கள் வீட்டு ஓட்டின் மீது விழுந்து வீடு சேதமடைந்ததால், அந்த மரத்தை நாங்கள் வெட்டச் சொன்னோம். மேற்படி சம்பவத்தால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 20.12.2024ம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணியளவில், எங்கள் வீட்டிலிருந்து என் கணவர் செல்

போனில் பேசிக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரிகள் அங்கு வந்து, எனது கணவரை பார்த்து, ஓட்டில் மரம் கிடப்பதாக ஊரெல்லாம் சொல்லிக்கிட்டு திரியுரியா உன்னை சும்மா விடமாட்டேன் என்று திட்டிக்கொண்டு, கழியால் எதிரிகள் இருவரும் என் கணவரை அடிக்க வந்தார்கள். அதை நான் தடுத்தபோது, எதிரி செந்தில்குமார் கழியால் என் நெற்றியில் அடித்து, இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். (சாட்சி தன் வலது புற நெற்றியில் சற்று மேல் உள்ள காயத்தழும்பை காட்டினார்). எதிரி ஆனந்த் மூங்கில் கழியால் பின் தலையிலும், இடது கை முட்டியிலும் அடித்தார். அதனால் தற்போதுவரை எனது இடது கையை தூக்க இயலவில்லை. என் மருமகள் வந்து தடுத்தபோது,எதிரி ஆனந்த் மூங்கில் கழியால் என் மருமகளின் நெற்றியில் அடித்தார். அதில் என் மருமகளுக்கு புருவத்தில் காயம் ஏற்பட்டது. பின்னர் நாங்கள் தா.பழூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அவர்கள் எங்களை மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். நாங்கள் தா.பழூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் மரம் வெட்டுவது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளால் எனக்கோ, என் மருமகளுக்கோ எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பொய் வழக்கு எதிரிகள் மீது

கொடுத்துள்ளதால்தான் நான், என் கணவர், மருமகள், ஆகியோர் முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம் அளித்துள்ளோம் என்றாலும் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்தமாதிரிதான் புகார் கொடுத்து, சாட்சியம் அளித்திருப்போம் என்றால் சரியல்ல.

2) நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து புகார் கொடுக்க நேரடியாக காவல்நிலையம்தான் சென்றோம் என்றால் சரிதான். யார் யார் சென்றோம் என்றால் என் மருமகள், நான், என் கணவர் ஆகியோர் சென்றோம். நாங்கள் காவல் நிலையம் சென்றோம், அங்கு சம்பவம் பற்றி கூறினோம். ஆனால், அவர்கள் எங்களை மருத்துவமனைக்கு முதலில் செல்லும்படி கூறினார்கள். நாங்கள் மருத்துவமனைக்கு காவல் நிலையத்திலிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம்தான் சென்றோம் என்றால் சரியல்ல, பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து அரியலூர் அரசு மருத்துவமனைக்கு எப்போது சென்றோம் என்றால் அன்று இரவே சென்றோம். நாங்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்த அரை மணி நேரத்தில் மேல் சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அரியலூரில்தான் போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் நேரம் நினைவில்லை. நாங்கள் மருத்துவமனையில்சேர்ந்த அடுத்த பத்த நிமிடத்தில் போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன் விரோதம்

உள்ளதால் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து, அந்த புகாருக்கு ஆதரவாக நானும் என் கணவர், மருமகள் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகள் மூங்கில் கழியாலோ, கட்டை கழியாலோ என்னையோ என் மருமகளையோ தாக்கவில்லை என்றாலும், அதனால் எங்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்களை தாக்கியதாக சொல்வது வழக்கிற்காக சொல்வது என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையோ, என் மருமகளையோ கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றாலும், அவ்வாறு எங்களை திட்டியதாக சொல்வது வழக்கிற்காக சொல்வது என்றால் சரியல்ல. நாங்கள் பொய் சாட்சியம் அளிப்பதால்தான் நான், என் கணவர், என் மருமகள் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளால் எனக்கு எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளால் எங்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.